கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,
பெரியகுளம்
வழக்கு எண் MCOP No. 181/2023

நாள்: 27.03.2026

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

(ம.சா. 1 செல்வம் முன்னிலையானார். மீண்டும் இன்று அழைக்கப்பட்டு Grand I Bench Clerk திரு. ரகுநாதன் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை)

விபத்தில் இறந்து போனவர் என்னுடைய மகன் ஆவார். அவருக்கு விபத்தின் போது வயது என்ன இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. என்னுடைய மகன் கேரளாவில் நெடும்பரம்பில் கூலி வேலை பார்த்தார். அவர் அங்கு கூலி வேலை பார்த்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. ம.சா.ஆ. 3 ஆவணத்தில் விபத்து சமயத்தில் எனது மகன் எத்தில் ஆல்கஹால் என்ற மது பானத்தை குடித்து வண்டி ஓட்டி வந்தார் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு யார் சொன்னார் என்றால் விபத்து சமயத்தில் கம்பத்திலிருந்த எனது அத்தை மகன் சரவணன் சொல்லி எனக்கு தெரியும். தற்போது சரணவன் சென்னையில் இருக்கிறார். எனது மகன் விபத்து சமயத்தில் தீபாவளி பண்டிகை என்பதால் எனது அத்தை மகன் சரவணன் என்பவருடன் சேர்ந்து மது அருந்தி விட்டு வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. விபத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லும் எனது அத்தை மகன் சரவணன் என்பவரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். பிரேத பரிசோதனை நடந்த பிறகு

எனது மகனின் உடல் உள் உறுப்புகளை எடுத்து இராசயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த இராசயன அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். இராசயன அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் விபத்திற்கு காரணம் என்னுடைய மகன் என்று தெளிவாக தெரிய வரும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தை நான் நேரில் பார்த்தேன். விபத்து நடந்த இடம் தேனி – கம்பம் மெயின் ரோடு என்றும் தென்வடல் ரோடு என்றும் சொன்னால் சரிதான். எனது மகன் கம்பத்திலிருந்து தேனிக்கு வரும் வழியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் SVS காலனிக்கு எதிர்புறம் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் தென்வடல் ரோட்டில் கிழக்கு பக்கம் நடந்தது. எனது மகன் மீது மோதிய வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும் வாகனத்திற்கு நோட்டின் கிழக்கு பக்கம் தான் இடது பக்கம் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது மகனை இடித்ததாக சொல்லக்கூடிய 2 ஆம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஓட்டுனர் சாலை விதிகளை கடைப்பிடித்து மெதுவாகவே வாகனத்தை ஓட்டி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் ஓட்டி வந்த வாகனம் அவருக்கு சொந்தமானது. எனது மகனுக்கு இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. எனது மகனின் இரு சக்கர வாகனம் முறையாக காப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனது மகன் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்காததால் அவசிய கட்சியை கட்சி சேர்க்காத தோஷத்தினால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 9 ஆவணத்தின் படி எனது மகன் மது அருந்தி ரோட்டின் இடது பக்கம் இருந்து வலது பக்கமாக வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எதிரே வந்த 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்காததால் நான் தாக்கல்

செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் விபத்து நடந்தது பற்றி கூறியுள்ள விஷயங்கள் அனைத்தும பொய்யானவை என்றும் இறந்து போனவர் எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யான சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றும் அவை எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. TN 60 AB 1571 வாகனத்தின் ஓட்டுனர் விக்னேஷ் பாண்டி சாலை விதிகளை கடைப்பிடித்து ரோட்டின் இடது பக்கம் தான் வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு கோர வேண்டும் என்றால் எனது மகன் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனம் காப்பீடு செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திடம் தான் கோர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விபத்து சம்பந்தமாக நடந்த வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. 2 ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.03.27 16:02:11 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.